Registered as a Newspaper

பாரதி
கல்வி நிலையம்
சித்தன்கேணி
86 A L
Paper Class
ஆரம்பம்: 24-1-1986
வெள்ளி பிற்பகல்
2-30 மணி.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ-1/=

பாரதி
கல்வி நிலையம்
சித்தன்கேணி
PHYSICS
திரு. சத்தியசீலன்
CHEMISTRY
திரு. மக்லி
ZOOLOGY
திரு. நாகநாதன்
BOTANY
திரு. குகாதரன்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஹூ தை மீ 9 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 11 (22-01-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:-56

# யாழ்ப்பாணத்தில் இன்று ஹர்த்தால்

## பல ஊர்வலங்கள் சங்கமித்து யாழ் செயலகத்தை அடையும்

### அன்னையர் முன்னணி மறியல் போராட்டம்

யாழ் பாணம்; ஜன. 22

* இராணுவ முகாம்களைச் சுற்றி பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டதை வாபஸ் பெறவேண்டும்.
* இராணுவத்தைக் கோட்டையில் இருந்து வெளியேற்ற வேண்டும். இக்கோரிக்கைகளை முன்வைத்து இன்று யாழ் நகரில் மாபெரும் ஹர்த்தால், மறியற் போராட்டம் நடத்தப்படுகின்றது.

அன்னையர் முன்னணியின் மறியல் போராட்டம், இன்று யாழ் செயலகத்தின் முன் ஆரம்பமாகின்றது.

தொடர்ச்சியாக இம் மறியல் போராட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் யாழ் மாநகர வர்த்தகர் சங்கம், ஈழத் தமிழ்ப் பெண்மணிகள் இயக்கம், திருநெல்வேலி பிரஜைகள் குழு, வகுப்புத் தொழிலாளர் சங்கம் ஆகியன பங்குபற்றுகின்றன.

அன்னையர் முன்னணியின் ஊர்வலம் சென் ஜோன்ஸ் கல்லூரியின் முன்னல் இருந்து ஆரம்பமாகிறது.

இந்த ஊர்வலம் முதலாம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை வீதிச் சந்தி, ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, கே. கே. எஸ். வீதி, ஆஸ்பத்திரி முன் வீதி வரை வரும்.

பின்னர் யாழ் மாநகரமின் நிலையம் முன்பாக ஆரம்பமாகும் வர்த்தக சங்க ஊர்வலத்துடன் சேர்ந்து கொள்ளும்.

யாழ் மாநகர மின் நிலையம் முன்பாக இருந்து புறப்படும் ஊர்வலம், ஆஸ்பத்திரி வீதியால் நேராகச் சென்று கச்சேரியை அடையும்.

ஊரவலம் முடிவில் அரசாங்க அதிபரிடம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### 27 பேர் பலி

லெபனனில் இன்று இடம் பெற்ற கார் குண்டு வெடிப்பில் 27 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் அதிகமானேர் காயம் அடைந்தனர்.

## யாழ் முஸ்லிம்கள் நேற்று உணர்ச்சி பூர்வமான பேரணி

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ் முஸ்லிம் பொது மக்கள் குழுவினல் ஏற்பாடு செய்யப்பட்ட பிரமாண்டமான பேரணி ஒன்று நேற்று யாழ் நகரில் நடந்தது.

1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை எதிர்த்தும், யாழ் கோட்டையில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெறக் கோரியும் இராணுவத்தின் குண்டுத் தாக்குதல்களினல் மரணமான ஒன்பது முஸ்லிம்களுக்கும் அநுதாபம் தெரிவித்தும் இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

காலை 8 30 மணிக்கு ஒஸ்மானியாக் கல்லூரி முன்பாக ஆரம்பித்து யாழ் செயலகம் நோக்கிச் சென்ற இந்த பேரணியில் முஸ்லிம் பொது மக்களும் மாணவ மாணவியரும் உணர்ச்சி பூர்வமாகக் கலந்து கொண்டனர்.


கோஷங்களை ஆவேசமாக எழுப்பிக்கொண்டு அவர்கள் நடந்து சென்றனர்.

பேரணி கொட்டடி வீதி வழியாக வைத்தீஸ்வரா வித்தியாலயம், காங்கேசன்துறை வீதி, மணிக்கூட்டுக் கோபுர வீதி, ஆரிய குளச் சந்தி, ஆஸ்பத்திரிச் சந்தி, யார்ட்டின் வீதி, பிரதான

(4 ஆம் பக்கம் பார்க்க)



யாழ் முஸ்லிம் பொதுமக்கள் குழுவின் பேரணி நேற்று யாழ் செயலகத்தை சென்றடைந்த பின்னர் அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் பேரணியினர் மத்தியில் உரை நிகழ்த்துகிறுர்.



யாழ் முஸ்லிம் பொதுமக்கள் குழுவின் பேரணி நேற்று யாழ்நகரில் இடம்பெற்ற பொழுது எடுக்கப்பட்ட படங்கள்.

## "ஸ்ரார்ட்" பண்ணுத மினி பஸ்ஸை வாவிக்குள் தள்ளினர்

மட்டக்களப்பு, ஜன.22

"ஸ்ரார்ட்" செய்ய முடியாத மினிபஸ் ஒன்றை ஆயுதப் படையினர் வாவிக்குள் தள்ளிவிட்டனர். மினிபஸ் சாரதிகளுக்கு அடியும் விழுந்தது.

மட்டக்களப்பில் நேற்று (செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணி அளவில் இந்த சம்பவம் நடந்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

ஆயுதப் படையினர் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை மட்டக்களப்பு நகரில் மினிபஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### 20 சடலங்களும் எரிப்பு

மட்டக்களப்பு.ஜன.22

மட்டக்களப்பு இருதயபுரத்தில் இறந்தவர்களில் 20 பேரின் சடலங்கள் நேற்று ஆயுதப்படையினரால் எரிக்கப்பட்டன.

சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காணப்பட்ட போதிலும் அவை உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை.

கல்லடி இராணுவ முகாமுக்கு சமீபமாக உள்ள மயானம் ஒன்றில் குவியலாக போடப்பட்டு சடலங்கள் எரிக்கப்பட்டன என்று அறியப்படுகிறது.

## கண்காணிப்புக் குழு கலைக்கப்படுமா?

கொழும்பு, ஜன 22

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கலைக்கப்படுமா?

கண்காணிப்புக் குழுவின் இரு உறுப்பினர்கள் இராஜினமாச் செய்ததை அடுத்து கண்காணிப்புக் குழுவைக் கலைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

போராளிகளினல் சிபார்சு செய்யப்பட்ட பெயர்ப் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் கா. சிவத்தம்பி, திரு. இ. சிவபாலன் ஆகியோர் ராஜினமாச் செய்ததும யுத்த நிறுத்த மீறல்கள் மிக மோசமடைந்து வருவதும்– தெரிந்ததே.

தொடர்ச்சியாக நடைபெற்று வரும் யுத்த நிறுத்த மீறல்களாலும் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்கள் இருவரின் ராஜினமாவாலும் கண்காணிப்புக் குழு செயல் இழந்து போகும் நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பாதுகாப்பு வலயம்

# மக்களை பாதிக்காதிருக்க முயற்சிப்போம் - பிரிகேடியர்

யாழ்ப்பாணம், ஜன. 22,

எமது நடவடிக்கைகளின்போது பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்க, எம் சக்திக்குட்பட்ட சகல முயற்சிகளையும் நாம் எடுப்போம்.

வடபகுதி இணைப்பு அதிகாரி பிரிகேடியர் எச்: எஸ். ரூபசிங்கா மேற்கண்ட உறுதி மொழியைப் பொது மக்களுக்கு வழங்கியுள்ளார்.

தேவை முடிந்தவுடன் பாதுகாப்பு வலயங்கள் இயங்கமாட்டா என்றும் இணைபபதிகாரி தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இணைப்பு அதிகாரி இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

பாதுகாப்பு வலயங்கள் பிரகடனம் குறித்து நேற்றுக் காலை பிரஜைகள் இணைப்புக் குழு, மக்கள் செயலூக்கக் கமிட்டி ஆகியவற்றின் தூதுக்குழுக்கள் இணைப்பு அதிகாரியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தின.

பேச்சுக்களின் போது இத்தூக் குழுக்கள் பாதுகாப்பு வலயப்பிரகடனம் குறித்துதங்கள் கவலையை வெளியிட்டன.

அதைத் தொடர்ந்தே இணைப்பு அதிகாரி இந்த அறிக்கையை விடுத்தார்.

அறிக்கை விபரம் வருமாறு:–

பொதுமக்களின் பிரதிநிதிகளை இன்று காலை நான் சந்தித்தேன்.

பாதுகாப்பு வலயங்களுக்குள் வாழும் பொதுமக்கள் தற்போது பதற்றமோ, அச்சமோ அடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டம், ஒழுங்கு நிலைநாட்டுவது எங்கள் கடமை என்கிறு! இணைப்பு அதிகாரி

—உதயன் பிரதம செய்தியாளர்—

யாழ்ப்பாணம், ஜன. 22

பாதுகாப்பு வலயம் குறித்து பொது மக்கள் அச்சப்படத் தேவை இல்லை இது சம்பந்தமாக பொது மக்கள் எதிர் நோககும் கஷ்டங்கள் அனுதாபத்துடன் கவனிககப்படும்.

இப்படி வட பகுதி இணைபபதிகாரி பிரிகேடியர் எச். எஸ் ரூபசிங்கா நேற்று உறுதி அளித்தார்.

பாதுகாப்பு வலயத்தினுள் வரும் பகுதிகளில் வாழும் பொது மக்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டியதில்லை. அலுவலகங்களையும் அகற்ற வேண்டியது இல்லை. வழமைபோல் மக்களும் அரசாங்க ஊழியர்களும் தங்கள் அன்ருடக் கடமைகளை மேற்கொள்ளலாம் என்றும் பிரிகேடியர் ரூபசிங்கா,

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வெளிநாட்டுப் பெண்ணைக் காணவில்லை

கொழும்பு,ஜன.22

முல்லைத்தீவுப் பகுதியில் காரில் சென்ற வெளிநாட்டுப் பெண் ஒருவரை காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கார், காரின் சாரதி ஆகியோருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

### 600 ஜீப்புகள் வந்திறங்கின

கொழும்பு, ஜன 22

600 டொயோட்டா ஜீப்புக்கள் ஆயுதப் படையினரின் பாவனைக்காக கொழும்புத் துறைமுகம் வந்திறங்கின.

நேற்று முன்தினம் வந்திறங்கிய ஜீப்புக்கள் ஜம்பட்டா வீதியில் ஒன்றன்பின் ஒன்ருக நிறுத்தப்பட்டிருந்தன.

ஜீப்பின் முன் பக்கத்தில் 'இராணுவ கமாண்டோ'— என்ற லேபல்கள் ஒட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஜீப்பிலும் இந்தலேபல் காணப்பட்டது.

# தமிழ் இளைஞருடன் நேரில் பேச

## ஜனதிபதி விருப்பம்; ஆனல் நிபந்தனை:

### 'இந்து' ராமுக்கு அளித்த பேட்டி

கொழும்பு,ஜன.22

தமிழ் தீவிரவாத இளைஞர்களுடன் எந்த இடத்திற்கும் போய் நானே நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருக்கிறேன். இந்திய மத்திய அரசாங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து தரலாம்.

அதற்கு முன்னர் தமிழ் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு ஜனநாயக அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஜனதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன 'இந்து' பத்திரிகையின் துணையாசிரியர் திரு. ராமுக்கு அளித்த சிறப்பு பேட்டியில் தெரிவித்திருக்கின்ருர்.

"இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதேஎனது விருப்பம். ஆனல் தமிழ் இளைஞர்கள் இராணுவ ரீதியில் தீர்வுகாண விரும்புகின்ருர்கள் திரு. எஸ். தொண்டமான் பிரார்த்தனை என்றும் அது தோற்ருல் வேலை நிறுத்தம் என்றும் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களுக்குத் திட்டமிட்டிருந்தார் அதனல் அவருடன்பேச்சுவார்த்தை நடத்தினேன்.

மலையகத் தமிழர் பிரச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

22.1.1986

புதன்கிழமை

சுபநேரம்:
5.05 முதல் 6.35 வரை

ராகுகாலம்:
12 35 முதல் 2.05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

கண்ணப்ப நாயனர் குருபூஜைத் தினம்

## முகமூடி முன் ஆஜர் செய்யப்பட்ட 252 பேரில் 220 பேர் விடுதலையாகினர்.

மட்டக்களப்பு, ஜன.22

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த சம்பவங்களின் போது மட்டக்களப்பு இருதயபுரத்தில் கைது செய்யப்பட்ட 252 பேரில் 220 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் கல்லடி இராணுவ முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டு ஒவ்வொருவராக முகமூடி நபர் ஒருவரின் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

முகமூடி நபர் அளித்த தீர்ப்பின் பிரகாரமே 220 பேர் விடுதலையாகினர்.

மிகுதி 32 பேரும் மேலதிக விசாரணைக்காக கல்லடி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

### முச்சந்தி முரளி



உப்பிடி நிபந்தனையள் விதிச்சால் காலத்தை நல்லாய்க் கடத்திக் கொண்டு போகலாம் எண்டதை நாப்பது வருஷ கால அனுபவம் பேசாதோ என்ன!

### ★ அந்த "சடலம்" இறந்து விட்டது.

ஆயுதப் படையினரால் சடலங்களோடு சடலங்களாக லொறியில் போடப்பட்டு கல்லடி முகாமுக்குக் கொண்டு வரப்பட்ட நபர் பின்னர் இறந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"லொறியில் கிடந்த 'சடலம்' ஒன்று தண்ணீர் கேட்டது!" என்ற தலைப்பில் இது சம்பந்தமான செய்தி நேற்றைய உதயனில் முதலாம் பக்கத்தில் வெளிவந்திருந்தது.

கல்லடி இராணுவ முகாமில் சடலங்கள் லொறி ஒன்றுக்குள் போடப்பட்டிருந்ததும் அவற்றை அடையாளம் காண லொறிக்குள் ஏறிய ஒருவர் சடலங்களில் ஒன்று தண்ணீர்! தண்ணீர்! என்று கேட்டதை அடுத்து நபர் ஒருவர் உயிருடன் சடலங்களுடன் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டதும் தெரிந்தவையே.

துப்பாக்கிச் சூட்டுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டைரக்ஷன் துறையை வெறுக்கிறர் விஜயா

''நடிப்புத் துறையில் தான் எனக்கு ஆர்வமே தவிர, டைரக்ஷன் துறையில் அல்ல'' என்றுர் கே. ஆர். விஜயா.

அவர் இதுபற்றி மேலும் கூறுகையில்,

கடைசிவரையிலும் நடிப்புத் துறையில் மட்டுமே கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்.

''டைரக்ஷன் துறைக்குப் போவீர்களா?'' என்று சிலர் கேட்கிறுர்கள் எனக்கு அந்தத் துறையில் ஆர்வம் இல்லை. கேமராவில் இடம், வலம் பார்க்கக்கூட எனக்குத் தெரியாது.

எனக்குப் பூரண திருப்திதரும் துறையே நடிப்பு தான். இந்தத் துறையை இலகுவில் விட்டுவிடவும் மாட்டேன்.

எத்தனையோ விதமான வேடங்களில் நடித்திருந்தாலும் இன்னும் பல கேரக்டர்களைச் செய்யாமல் இருக்கிறேன். அவற்றைச் செய்து விட வேண்டும் என்று ஆவலாய் இருக்கிறேன்.

இந்தக் காலத்து நடிகைகளைப் பற்றி நான் குறை கூறியதாக ஒரு பத்திரிகையில் செய்தி வெளி வந்திருந்தது. மற்றவர்களைப் பற்றி நான் எப்போதுமே பேசுவது இல்லை. மற்றவர்கள் மனதைப் புண்படுத்துவது எனக்கு அறவே பிடிக்காத விஷயம்.

எனது சொந்தப் படங்களில் கூட நான் தலையிடுவதில்லை என் கணவர் தான் அவற்றை எல்லாம் கவனித்துக் கொள்கிறுர்.

விரைவில் படம் ஒன்றை தயாரிக்க இருக்கிறேம். அதற்குப் பொருத்தமான கதையைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

பல்வேறு கதாபாத்திரங்களில் நடித்து வரும் எனக்கு மாறுபட்ட அனுபவம் புதிய தெலுங்குப் படம் ஒன்றில் ஏற்பட்டது.

ஆம். இதில் நான் ஸ்டண்ட் எல்லாம் செய்து இருக்கிறேன் ஆக்ஷன் ஹீரோயின்!'' என்றுர்.

தினசரி சினிமா

# அணுசக்தி அமைப்புகளை பரஸ்பரம் பார்வையிட தயார்

## அமெரிக்காவுக்கு ரஷ்யா அறிவிப்பு

மொஸ்கோ, ஜன.21

அணுசக்தித் துறை அமைப்புகளை பரஸ்பரம் பார்வையிடத் தயார்.

இவ்வாறு சோவியத் ரஷ்யா அமெரிக்காவிடம் தெரிவித்துள்ளது.

ரஷ்யா மேலும் தனது நிலையை வெளிப்படுத்துகையில்;

அணுகுண்டு வெடிப்பு போன்ற நடவடிக்கைகளை இரு தரப்பாரும் நிறுத்தி வைக்கும் முன் முயற்சியை அமெரிக்கா தனது பாராளுமன்றக் குழுவின் முன் வைக்க வேண்டும்.

அணுசக்தித்துறை அமைப்புக்களைப் பரஸ்பரம் பார்வையிடுவதில் எந்தச் சிரமங்களும் இருக்கமுடியாது.

ஐரோப்பாவிலிருந்து நடுத்தர ஏவுகணைகளை முற்றாக அகற்றுவதற்கான உடன்பாடு காணப்படவேண்டும். இது சாத்தியமாகக் கூடிய விடயம் என்றே சோவியத் நம்புகிறது.

அமெரிக்கா மற்றைய நாடுகளுக்கு போர் உபயோகத்துக்கான ஆயுதங்களையும் மற்றும் நடுத்தர ஏவுகணைகளையும் விற்பனை செய்யக்கூடாது.

இதற்கு அமெரிக்கா உத்தரவாதம் அளிக்க வேண்டும். இவ்வாறு ரஷ்யா தெரிவித்துள்ளது.

சோவியத் தனது ஆயுத ஒழிப்புத் திட்டத்தை தெட்டத்தெளிவாக ஏற்கனவே வெளியிட்டு விட்டது.

இதன்படி முதற்கட்ட நடவடிக்கையாக தனது எஸ் எஸ். 20 ரக ஏவுகணைகளை யூறல்ஸ் பகுதிக்கு அப்பால் கிழக்கே வைக்க முடிவு செய்துள்ளது.

தனது அணு ஆயுத நடவடிக்கைகளை ஒரு தலைப்பட்சமாக 3 மாதத்துக்கு மேலும் ஒத்திப் போட்டுள்ளதாக ரஷ்யா ஏற்கனவே அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சீனுவில் பிரதியமைச்சர் பதவி நீக்கம்

பீகிங், ஜன. 21

சீன அரசு தனது பிரதி வெளிநாட்டு வர்த்தக அமைச்சர்கள் இருவரை வெளியேற்றி விட்டது.

இந்த செய்தியை சீன மக்கள் தினசரி வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் ஜெங்ருபின் இன்னும் பதவியிலிருக்கிறுர்.

## லிபியா மீது அமெரிக்கா தடை: ஆஸ்திரேலியா ஒத்துழைக்காது

### வெளிநாட்டமைச்சர் அறிவிப்பு

சிட்னி, ஜன. 21

லிபியா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார வர்த்தகத் தடை விடயத்தில் ஆஸ்திரேலியா ஒத்துழைக்காது.

இவ்வாறு அமெரிக்க வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பில் ஹெய்டன் அறிவித்துள்ளார்.

அவர் தமது அறிவிப்பில்; சர்வதேச ரீதியாக இதற்கு ஒத்துழைப்புக் கிடைக்காதவரை ஆஸ்திரேலியா அமெரிக்காவுடன் ஒத்துழைப்பது சாத்தியப்படாது.

எனினும் புதிய வர்த்தக நடவடிக்கைகளை லிபியாவுடன் மேற்கொள்வதில்லையென எமது நாடு முடிவு செய்துள்ளது.

விவசாய உணவுப் பொருள்களை ஆஸ்திரேலியா லிபியாவுக்குத் தொடர்ந்து ஏற்றுமதி செய்யும். இவ்வாறு ஹெய்டன் தெரிவித்துள்ளார்.

## ★ 10 ஆண்டுகள் தொடர்ந்து வேலை!

பீகிங், ஜன 21

ஒரு சுரங்கத் தொழிலாளி ஒருநாள் கூட ஓய்வு இன்றி 10 ஆண்டுகள் தொடர்ந்து வேலை செயதார்.

1975 ஆம் ஆண்டில் இருந்து 1,500 தினங்கள் இப்படி வேலை செய்தார்.

சீனுவைச் சேர்ந்த 42 வயதான ஷோ குன்லி என்ற பெயருள்ள இத்தொழிலாளியை ''வசேஷ மாதிரித் தொழிலாளி'' என்று சீன அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

## மத்திய அமெரிக்காவில் சமாதான யாத்திரை

மெக்ஸிக்கோ நகர், ஜன 21

உலகின் 300 க்கு மேற்பட்ட தார்மீக வாதிகள் மத்திய அமெரிக்காவிலுள்ள பனுமாவிலிருந்து தமது பாதயாத்திரையைத் தொடங்கியுள்ளனர்.

கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட இந்த யாத்திரை மத்திய அமெரிக்காவில் சமாதான முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டதாகும் என அறிவிக்கப்பட்டது.

சென்ற மாதம் 10 ஆம் திகதி தமது சமாதான யாத்திரையை ஆரம்பித்த இவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை கோத்தமாலாவையும் கடந்து மெக்ஸிக்கோவுக்குள் வந்துவிட்டதாகக் கூறப்பட்டது

மெக்ஸிக்கோ நகரை அடைந்ததும் அங்கிருந்து ஜனுதிபதி றேகனைச் சந்திப்பதற்காக ஒரு தூதுக் குழு அனுப்ப ஏற்பாடுகள செய்யப்பட்டுள்ளன.

பாதயாத்திரை அமைப்பாளர் இத்தகவலை வெளியிட்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

## வெளி உலகில்

### பிரிட்டன்-பிரான்ஸ் பாதை இணைப்பு

லண்டன், ஜன. 21

பிரிட்டனும் பிரான்ஸும் இருவழி சுரங்க ரயில் பாதையை அமைக்கத் திட்டமிட்டுள்ளன.

ஆங்கிலக் கால்வாய்க் கூடாக இந்த இரும்புப் பாதை அமைக்கபபடும்.

### தென் ஆபிரிக்க கறுப்பர்களுக்கு ஆதரவு வழங்குங்கள்

#### பிஷப் டுட்டு வேண்டுகோள்

புதுடில்லி, ஜன.21

தென் ஆபிரிக்க இன வெறி சிறுபான்மை அரசுக்கெதிரான மக்கள் போராட்டத்தை ஆதரியுங்கள்.

இவ்வாறு இன ஒதுக்கல் கொள்கை எதிர்ப்பு முன்னணிப் பிரசாரகரான பிஷப் டெஸ்மண்ட் டுட்டு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கறுப்பு அமெரிக்கத் தலைவர்களிடமே இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

காலஞ் சென்ற தென் ஆபிரிக்க கறுப்பு இனத் தலைவர் மாட்டின் லூதர் கிங் நினைவுக் கூட்டமொன்று அமெரிக்காவில் கூட்டப்பட்டது.

அக்கூட்டத்திற் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தென் ஆபிரிக்க கறுப்பு இன மக்கள் தமது போராட்டத்தில் மக்கள் இயக்கத் தலைவர் மாட்டின் லூதர் கிங்கின் கொள்கைகளைப் பின்பற்றுகிறுர்கள்.

எனினும் பிறிட்டோறிய அரசு இதற்குப் பதில் நடவடிக்கையாக கண்ணீர் புகைக்குண்டுகளையும் துப்பாக்கி ரவைகளையும சவுக்கடிகளையுமே வழங்கி வருகிறது.

இதற்கெதிராக கறுப்பின பக்களின் போராட்டத்துக்கு பெரிய அளவில் ஆதரவு பெருகவேண்டும் என்றுர்.

### டச் பாதுகாப்பு உஷார்

ஹேக், ஜன 21

டச் பாதுகாப்புப்படை உஷார் நிலையில் வைக்கப் பட்டுள்ளது.

டச் கேந்திரங்களில் பலஸ்தீன கெரில்லாக்கள் தாக்குதல் மேற்கொள்ளக்கூடும் என்ற அச்சமே காரணம் என்று நம்பப்படுகிறது.

இஸ்ரவேல் பிரதமர் ஷிமோன் பெரஸ் அங்கு விஜயம் மேற்கொண்ட பிறகே இந்த உஷார்நிலை என்றும் கூறப்படுகிறது

# வசதிகளை, செலவுகளைக் குறைத்து அகதிகள் நல்வாழ்வுக்கு உதவுங்கள்

## புனர்வாழ்வுக் கழகத் தலைவர் கூறுகிறர்

யாழ்ப்பாணம், ஜன 22

யாழ மக்கள் தத்தம் வசதிகளை வாழ்க்கைச் செலவுகளைக் குறைத்து அகதிகள் நல்வாழவுக்கு உரிய பங்களிப்பைச் செய்ய வேண்டும்

நவாலி பிரஜைகள்குழுவின் ஆதரவில் ஞாயிறு மாலை வை எம். சி ஏ. மண்டபத்தில் அகதிகள் நல்வாழ்வு பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் சிறப்புரை ஆற்றிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கே. விசுவலிங்கம் இவ்வேண்டுகோளை விடுத்தார்.

நவாலி பிரஜைகள்குழு தலைவர்திருசி ஜே இளையதம்பி கருத்தரங்குக்குத் தலைமை வகித்தார்.

திருகோணமலையில் 30,871பேரும், வவுனியாவில் 14 அகதி முகாம்களில் 2 399 பேரும், நெடுங்கேணியில் 4 அகதி முகாம்களில் 2,067 பேரும, மன்னரில் 4 அகதி முகாமகளில 2,318 பேரும், முல்லைத்தீவில் 14 அகதி முகாம்களில 5,224 பேரும கிளிநொச்சியில் 4 அகதிமுகாம்களில் 1,672 பேரும, யாழ் மாவட்டத்தில் 20,000 பேரும் அகதிகளாக இருப்பதாக புள்ளி விவரங்களுடன் திரு. விசுவலிங்கம விளக்கிக் கூறினுர்

பொது வைபவங்களிலும் குடும்ப நிகழ்ச்சிகளிலும பெருந்தொகையானபணம் வீணுகு விரயமாகிறது. விருந்து வைபவங்களில் மட்டுமல்லாது அன்றுடம் வீடுகளிலும் உணவு விடுதிகளிலும் கணிசமான உணவு வீணுக்கப்படுகிறது இவற்றை நாம் மீதப்படுத்த வேணடும்.

சேமிப்பு மூலம் சிக்கனம் மூலம் அகதிகள் நல்வாழ்வுக்கு மக்கள் காத்திரமான பங்களிப்புச் செய்ய வேண்டும.

இவ்வாறு நவாலி வை. எம.சி.ஏ. தலைவர் திரு கே தபபிரகாசா தமது பேசசில் குறிப்பிட்டார்.

அகதிகளின் கையறு நிலையைக் கணணீர்ககதைகள் மூலம் எடுத்துக் கூறிப் பேச்சை ஆரம்பித்த தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரசார இயககுநர் திரு. ஆ. கனகசபாபதி பின்வருமாறு குறிப்பிட்டார்:-

உடைமைகளை இழந்து, குடுமபத் தலைவர்களை இழந்து பயங்கர அனுபவங்களினல் தமது சொந்த ஊரைவிட்டு பாதுகாப்பு நாடி வந்துள்ள அகதிகள் நல்வாழ்வு இன்று யாழ்ப்பாணம முகம் கொடுக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று.

அகதிகளைப் பராமரிப்பதும் பின்னர் அவர்கள் புனர்வாழ்வுக்கு வழிவகுப்பதும் நமது கடமை. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 1983ஆம்ஆணடு ஒகடோபர் மாதம் தொடக்கம் இப்பணியில் ஈடுபட்டு வருகிறது.

கொண்டாட்டத்துக்கு இது காலமல்ல, குதூகலத்துக்கு இதுநேரமல்ல. ஏழைகள் துயர் துடைப்பது இறைபணி என்ற இந்து தர்மத்தை உணர்ந்து, கிறிஸ்தவ கருணை தருமசிந்தையைப் போற்றி இஸ்லாமிய சகோதரத்துவத்தைப் பேணித் தமிழ்மக்கள் அகதிகள் நல்வாழ்வுக்கு நன்கொடை வழங்க வேண்டும்.

இவ்வாறு திரு. கனகசபாபதி பேசி முடித்தார். நவாலி பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. யோ. சின்னத்துரை நன்றி கூறினுர்.

## இருதயபுரம் மோதலை அடுத்து 252 பேர் கைது

மட்டக்களப்பு ஜன 22

இருதயபுரம் மோதலை தொடர்ந்து ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட 252 தமிழர்கள் தொடர்ந்தும் விசாரணை செய்யபபடுகின்றனர்.

கல்லடி முகாமில் வைத்து விசாரணை நடைபெறுகின்றது.

நிரபராதிகளாகக் காணப்படுபவர்கள் விடுவிக்கப்படுவர் என்று இணைப்பதிகாரி திரு. மாக்ஸி பெரேரா, மட்டக்களப்பு பிரஜைகள் குழுவிடம் தெரிவித்தார்.

## தொண்டமான் பங்களாதேஷ் செல்கிறுர்

கொழும்பு, ஜன.22

அமைச்சர் தொணடமான் ஜனவரி 26 இல் பங்களாதேஷ் செல்பறுர்.

அங்கு உலக கைப்பணிக் கவுன்ஸில் பொருட்காட்சியில் திரு. தொண்டமான் கலந்து கொள்வார்.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

* பலாலி விமான நிலையப் பகுதி மக்கள் பீதி அடையத் தேவையில்லை
* அச்சமின்றி அவரவர் வீடுகளில் இருக்கலாம்......ஆனுல்

# படையினருக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது என நிபந்தனை

காங்கேசன்துறை, ஜன. 22

பலாலி விமான நிலைய பகுதியில் இருந்து 50யார் தூரத்தில் வசிக்கும் மக்கள் தொடர்ந்தும் அப்பகுதியில் பீதியின்றி வாழ வடபகுதி இராணுவ இணைப்பதிகாரி உத்தரவாதம் அளித்துள்ளார். அதே நேரம் படையினருக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில நடக்கக் கூடாதென அவர் நிபந்தனை விதித்தார்.

மயிலிட்டி பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் இணைப்பதிகாரியை சந்தித்து தமது கஷ்டநிலை குறித்து அப்பகுதி மக்கள் பிரஸ்தாபித்த சமயமே இணைப்பதிகாரி இப்படிக் கூறினுர்.

விமானநிலையபகுதியை சுற்றி பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தப்படுவது, இச்சுற்ருடலில் வசிப்பவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும என விடுக்கப்பட்ட அறிவிப்பு ஆகியன காரணமாக விமான நிலைய பகுதிக்கு கிழக்குப் பக்கமாக வாழ்ந்த சுமார் 40குடும்பங்கள் செய்வதறியது திகைப்படைந்திருந்தன.

மயிலிட்டி பிரஜைகள் குழுவுககு இம்மக்கள் முறையிட்டதை அடுத்து பிரஜைகள் குழு செயலாளர் திரு. வி. இரத்தினராஜா பாதிக்கப்பட்ட மக்கள் இராணுவ இணைப்பதிகாரியை சந்திக்க ஏற்பாடு செய்திருந்தார்.

பலாலி முகாமில் வைத்து இணைப்பதிகாரி பிரிகேடியர் திரு. ரூபசிங்காவை மக்கள் அடங்கிய குழு ஒன்று திங்கட்கிழமை சந்தித்து தமக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை விரிவத்தனர்.

அச்சமயமே இந்த மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு எழும்பத் தேவையில்லை எனவும், படையினருக்கு இடைஞ்சல் ஏற்படாத விதத்தில் அமைதி காக்க வேண்டுமெனவும் இணைப்பதிகாரி தெரிவித்தார்.

மக்களுக்கு படையினரால் ஏற்படுத்தப்படும் கஷ்ட, நஷ்டங்கள் பற்றி உயர்மட்டத்தில் சரியான முறையில் தெரியப்படுததப்படுவதில்லையெனவும்,இவ்வாருன சம்பவங்களை பிரஜைகள் குழுக்கள் மூலம் தமக்கு தெரியப்படுத்தினுல் தாம் உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினுர்.

இச்சந்திப்பின்போது படையினரால் மயிலிட்டிப் பகுதியில் பருத்தித்துறை வீதியில் மதில் ஒன்றும், கட்டுவன் வீதியில் மதில் ஒன்றும் உடைத்து சேதப்படுத்தப் பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட படையினர் மீது தாம் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதாகவும், பாதிக்கப்பட்ட வீட்டுக்காரர்களுக்கு உடன் நஷ்டஈடு வழங்க ஆவன செய்வதாகவும் அவர் கூறினுர்.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட மயிலிட்டி பிரஜைகள் குழு செயலாளர் திரு. வி. இரத்தினராஜா மேற்கண்ட விவரங்களை ''உதயன்'' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

### முகாமுக்கு சென்று கணவர் பற்றி கேட்டேன்

## அவரை எங்களுக்குத் தெரியும் பிடிக்கமாட்டோம் என்றனர்

### நாவற்குழியில் இறந்தவரின் மனைவி தகவல்

நல்லூர், ஜன. 22

கணவரைக் காணவில்லை என்று தெரிந்ததும் நாவறகுழி இராணுவமுகாமிற்குச்சென்று அவரைபபறறிக் கேட்டேன். அதற்கு அங்கிருந்த இராணுவ வீரர் ஒருவர் ''அவரைஎங்களுக்குத் தெரியும், அவரை நாங்கள் பிடிக்கமாட்டோம்'' என்றனர்.

நாவற்குழி உப்புப் பாத்திக்குள் மரணமான மனுவல் பெனடிக்டின் மனைவி சாடசியமளிக்கையில் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:—

கடந்த 16-ந் திகதி பகல் ஒரு மணியளவில் நான் ஆஸ்பத்திரியில் இருந்து நாவற்குழியில் உள்ள எனது வீட்டுக்குச் சென்றேன்.

வீடு பூட்டப்பட்டிருந்தது. வீட்டின் முன்பாக சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்தது.

எனது கணவரையும் வீட்டுக் காவலாளியையும் அங்கு காணவிலலை.

உடன் நான் அருகே இருந்த உப்புக் கூட்டுத் தாபனத்திற்குப் போய் விசாரித்தேன்.

அங்கு நின்ற காவலாளிகள் 'இப்பொழுது தான் ஆமிக்காரர்கள் பஸ்ஸிலும் கவசவாகனங்களிலும் சுட்டுக் கொண்டுபோகிறுர்கள்'.

'சிலவேளை இவரையும் அவர்கள் பிடித்துச் சென்றிருக்கலாம்' என்றனர். நாவற்குழி முகாமில் போய் விசாரிக்கும் [illegible] ணர்கள்.

[illegible] மிற்குச் சென்றேன்.

அங்கு 'கேற்'றுக்கு அருகில் நின்ற ஓர் இராணுவவீரரிடம் ஐயா மனுவல் பெனடிக்டை காணவில்லை, நீங்கள் பிடித்து வைத்திருக்கிறீர்களா? என்று கேட்டேன்.

அதற்கு அவர் அவரை எங்களுக்குத் தெரியும். அவரை நாங்கள் பிடிக்கமாட்டோம். அந்தப் பெயரில் இங்கே எவரும் இல்லை அம்மா என்று தெரிவித்தனர்.

நான் அழுதழுது வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

இருட்டி விட்டது. அப்பொழுது மீன் விசிப் பிடிக்கவந்த சிலர் உப்புப் பாத்திக்குள் இரண்டு பிரேதங்கள் [illegible] றன என்று தெரிவித்தனர்.

இரவானபடியால் இராணுவத்தினர் சுட்டு விடுவார்கள் என்ற பயத்தில் வெளிக்கிடவிலலை.

பின்பு அடுத்தநாள் காலை மற்றும் ஒரு காவலாளி வந்து உங்கள் கணவரின் சடலமும் காவலாளி ஒருவரின் சடலமும் உப்புக் கூட்டுத் தாபனத்தில் வைக்கப் பட்டிருப்பதாகச் சொன்னுர்.

நான்போய்ப் பார்த்த பொழுது எனது கணவரின் தலை பிளந்திருந்தது.

இப்படி அவர் தெரிவித்தார்.

## பொலிஸாரை கொன்றவர்கள் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஜன. 22

இருதயபுரம் பகுதியில் இரண்டு பொலிஸாரைச் சுட்டுக்கொன்ற இரண்டு இளைஞர்களை ஆயுதப் படையினர் அதே இடத்தில் வைத்தே சுட்டுக் கொன்றனர் என்று தெரியவருகின்றது.

ஒருவீட்டில் 3 பேர் சைனைட் அருந்தி இறந்தனர்.

அந்த வீடு பின்னர் ஆயுதப் படையினரால் தீக்கிரையாக்கப்பட்டது.


## 2 அடிக்கு மேல் மதில் இருந்தால் உடைக்கப்படும்

மட்டக்களப்பு, ஜன. 22

மட்டக்களப்பில் 2 அடிக்கு மேல் வீடுகளின் மதில்கள் இருக்கக கூடாது.

மட்டக்களப்பு இணைப் பதிகாரி மாக்ஸி பெரராதன்னைச் சந்தித்த மட்டக்களப்பு பிரஜைகள் குழுவிடம் இத்தகவலை வெளியிட்டார்.

## மக்கள் முகம்



### இடமாற்றம்

அச்சுவேலி, ஜன 22

வடமாநிலக் கல்வித் திணைக்களத்தில் ஆசிரியர் நிர்வாகப்பிரிவில் இடமாற்றங்களுக்கு பொறுப்பாக இருந்து கடமையாற்றிய திரு. அ. எமியனுஸ் வவுனியா கல்வித் திணைக்களததுக்கு இடமாற்றப்பட்டார்.

திரு. அ. எமியனுஸ் யாழ்- கல்வித் திணைக்களத்தில் ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகளின் பாராட்டைப் பெற்ற சிறந்த உத்தியோகத்தர் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உண்மை, தூய்மை, தன்னலங் கருதாமை - இம்மூன்றும் எவரிடம் உள்ளதோ, அவரை உலகில் எந்தச் சக்தியாலும் நசுக்க முடியாது. ஆகவே ஒவ்வொருவரும் இம்மூன்று உயரிய தன்மைகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

--சுவாமி விவேகானந்தர்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2480
22078
22-01-86 த. பெ. 23


## சடலங்களை நாய் தின்ன விடுவது புதிய தர்மமா?

இறந்தவர்களின் சடலங்களை நாய்கள் இழுத்துச் செல்லும் பரிதாப நிலை குறித்துச் செய்தி வெளியாகி உள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதம ஆஸ்பத்திரியிலேயே சடலங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க முடியாத கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு மனிதன் உயிரோடு இருக்கும்போது அவன்மீது வைக்கப்படும் மதிப்பும், மரியாதையும், அவன் இறந்ததும் அற்றுப் போவதைக் காண்கிறோம். எனினும் இறந்தவருக்கு நெருக்கமானவர்கள், அவர்மீது அன்பும் பாசமும் பொழிந்தவர்கள் அவரது இழப்பைத் தாங்க முடியாது கவலைப்படுகின்றனர்.

உயிரோடு இருக்கும் போது அவருக்குக் கொடுக்கப்பட்ட மரியாதையை இறந்த பின்னரும் கொடுக்க வேண்டும் என்று அந்த அன்பு உள்ளங்கள் விழைகின்றன.

அதன் காரணமாக எழுந்தவையே இறுதிச் சடங்குகள். நிதிவசதி குறைந்தவராக இருந்தாலும் அவரது சடலத்தை உரிய முறைப்படியும் விதிப்படியும் தகனமோ அன்றி அடக்கமோ செய்துவிட முயற்சிப்பதும் அதனாலேயே.

நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்கள் அங்கு இறந்து விட்டால், அவர்களது சடலங்களைப் பாதுகாப்பாக வைத்திருந்து உறவினரிடம் ஒப்படைக்க வேண்டியது ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் பொறுப்பு.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அத்தகைய பாதுகாப்பு எதுவும் செய்யப்படாமல், சடலத்தை நாய் இழுத்துச் சென்ற சம்பவம் பெரும் பாரதூரமான விஷயமாகும்.

மனம் பொறுக்க முடியாத நோயாளர்கள் தமது உடல் உபாதைகளையும் பொருட்படுத்தாது சடலத்தை நாய் கடித்துக் குதறாமல் காப்பாற்றினர் என்று எமது செய்தியாளர் எழுதுகின்றார்.

தற்போதைய பதற்ற நிலையாலும், வேறு பல குறைபாடுகளாலும் கிளிநொச்சி ஆஸ்பத்திரி நிர்வாகம் சீர்கெட்டதே இந்த அவலத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

இது நியாயப்படுத்தக் கூடிய ஒன்றல்ல. எந்த இக்கட்டான நிலையாயினும், நெருக்கடி மிகுந்த நிலையாயினும் ஆஸ்பத்திரி இயங்கியே ஆக வேண்டும். யுத்த காலத்தில் கூட ஆஸ்பத்திரிகளுக்கு விசேஷ சலுகைகள் வழங்கப்பட்டு, சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்படுவது உண்டு.

அவ்வாறிருக்க, பதற்ற நிலையைக் காரணம் காட்டி ஆஸ்பத்திரி நிர்வாகத்தைச் சீர்கெட அனுமதிக்கக் கூடாது. அதற்கு அங்கு பணிபுரியும் ஊழியரும் உடந்தையாக இருந்தால் அவர்களைப் பாவச்சுமை வந்து சேரும்.

நெருக்கடி மிகுந்த நிலையிலும், இம்மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வைத்தியர்களும், ஊழியர்களும் செய்த சேவையைத் தொண்டினை ஏனைய தமிழ் மாவட்டங்களில் உள்ளவர்களும் பின்பற்ற வேண்டும்.

தமிழர்கள் நாளாந்தம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியாவதும் காயமுறுவதும் சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது. இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ் மாவட்ட ஆஸ்பத்திரி ஒன்றின் நிர்வாகம் சீர் கெடலாமா?

இத்தகைய ஒரு நெருக்கடி மிகுந்த காலத்தில் அங்கு பொறுப்பு வாய்நத அதிகாரி ஒருவர் இல்லாதிருப்பது அரசாங்கம் வேண்டுமென்றே செய்த சதியோ என்று சந்தேகிக்க இடமுண்டு.

பொறுப்பு வாய்ந்த வைத்திய அதிகாரியை இடமாற்றம் செய்து விட்டு, அவரது இடத்துக்கு வேறு ஒருவரை இதுவரை நியமிக்காதது ஏன்? அந்த அதிகாரி இல்லாமல் ஆஸ்பத்திரி நிர்வாகம் சரிவர இயங்குவது சிரமம் என்பது டாக்டரான சுகாதார அமைச்சருக்குத் தெரியாமல் போனதா? அல்லது அவரது அதிகாரிகளுக்குத் தெரியாமல் போனதா?

அப்பாவித் தமிழர்களை நாய்போலச் சுட்டுத் தள்ளும் அதே பாணியில், அவர்களது சடலங்களையும் நாய்கள் இழுத்துச் செல்ல விடுவோம் என்று அரசு நினைக்கிறதா?

சடலங்களோடு உயிருள்ள தமிழனையும் லொறியில் போட்டு வைத்திருந்த சம்பவத்தைக் கேட்ட பின்னரும் வேறு எப்படிக் கருதுவது?

தமிழர் சடலங்களை நாய் தின்னவிடுவது புதிய சிங்களத் தர்மம் ஆக மாறுமோ என்னவோ.

# கிளிநொச்சி அபிவிருத்திக்கு

# ரூபா 56 லட்சம்

## பல திட்டங்களை அமுல் செய்யும் பணியில் அரச அதிபர் தீவிரம்

கிளிநொச்சி மாவட்ட எல்லைக்குள் சுமார் 56 லட்சம் ரூபா பெறுமதியான அபிவிருத்தி வேலைகளை 1986 ஆம் ஆண்டில் மேற்கொள்ள கிளிநொச்சி அரசாங்க அதிபர் என். ஜெயநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது சம்பந்தமான கலந்துரையாடல் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது. பல திணைக்களங்களின் உயர் அதிகாரிகளும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

1986ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சுமார் இருபத்திஏழரைலட்சம் ரூபாவும் மாவட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து சுமார் இருபத்தி எட்டு லட்சம் ரூபாவும் இந்த அபிவிருத்தி வேலைகளுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்விரு நிதிகளில் இருந்தும் கல்வி அபிவிருத்திக்கு எட்டரை லட்சம் ரூபாவும், வீதித் திருத்த வேலைகளுக்கு பத்து லட்சம் ரூபாவும் நீர்ப்பாசன வேலைகளுக்கு மூன்றரை லட்சம் ரூபாவும் கமநல சேவைத் திணைக்களத்தின் மூலம் செலவிடப்படும்.

சிறு குளங்கள் புனரமைப்பு வேலைக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும், மின்விநியோகத்துக்கு எட்டரை லட்சம் ரூபாவும், பொதுசனத் தொடர்பு வேலைக்கு மூன்று லட்சம் ரூபாவும், சிறு வேலைகளுக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும், கால்நடைவளர்ப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும், மீன்பிடி வேலைகளுக்கு ஒரு லட்சம் ரூபாவும், கட்டடவேலைகளுக்கு மூன்றரை லட்சம் ரூபாவும், தொழிற்சாலைகள் அமைத்தலுக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும், உள்ளூராட்சித் திணைக்களங்கள் மூலம் கிராம அபிவிருத்திக்கு பன்னிரண்டரை லட்சம் ரூபாவும், செலவிடப்படும்.

இந்த அபிவிருத்தி நிதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் விவரம் வருமாறு:-

**வீதி:-**

பூநகரி சுளுவில் வேரவில் வீதி வேலைகளுக்கு ரூபா இரண்டரை லட்சம், கிளிநொச்சி வில்சன் வீதி 2ஆம் கட்டை முதல் 4ஆம் கட்டை வரை திருத்த வேலைக்கு ரூபா ஒன்றரை லட்சம், ஆனையிறவு சுண்டிக்குளப் வீதி வேலைக்கு ரூபா ஒரு லட்சம், புலோப்பளை அல்லிப்பளை வீதி வேலைகளுக்கு ரூபா ஐம்பதாயிரம், கிளிநொச்சி ரயிலர் வீதி திருத்த வேலைக்கு ரூபா எண்பதாயிரம், முறிகண்டி அக்கராயன் வீதிக்கு 3 ஆம் மைலிலிருந்து 7 ஆம் மைல் வரை திருத்த வேலைக்கு ரூபா ஒன்றரை லட்சம், பரந்தன் முல்லைத்தீவு 7 ஆம் கட்டை பால வேலைக்கு ரூபா இரண்டரை லட்சம்.

**நீர்ப்பாசனம்:-**

சென்ற வருட மிகுதி வேலைகளுக்கு ரூபா ஒன்றரை லட்சம், அம்பலப்பெருமாள் குளத்திலிருந்து அக்கராயன்குள வீதி திருத்த வேலைக்கு ரூபாஒருலட்சம்,கரவெட்டித்திடல், அக்கராயன் குளம்நெத்தலி ஆறு வேலைகளுக்கு ரூபா ஐம்பதாயிரம, முறிப்புக்குள நீர்ப்பாசன வேலைக்கு ரூபா அறுபதாயிரம்.

**கமநல சேவை நிலைய**

**சிறுகுள வேலைகள்:-**

திராய்குளம், வன்னம்பிட்டிக்குளம் திருத்த வேலைக்கு ரூபா நாற்பத்தாறுயிரம் நீவில்குளம், நெடுங்கேணிக்குளம், உருத்திரபுரம்குளம், கனகபுரம்குளம், கந்தன்குளம் திருத்த வேலைகளுக்கு ரூபா ஒரு லட்சம்

**கல்வி:**

சென்ற வருட மிகுதி வேலைகளுக்கு ரூபா லட்சம்,பெரியகுளம் ஐயனார் பாடசாலைக் கட்டடத்திற்கு ரூபா 50 ஆயிரம், கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயக் கட்டட வேலைக்கு ரூபா 75 ஆயிரம், இயக்கச்சி அ. த. க பாடசாலைக்கு ரூபா லட்சத்து 80 ஆயிரம், கரவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்துக்கு ரூபா 1 லட்சத்து 25 ஆயிரம். தர்மபுரம் அ.த.க. பாடசாலைக்கு ரூபா 1 லட்சத்து 25 ஆயிரம், வேராவில் அ.த க. பாடசாலை, நாச்சிக்குடா முஸ்லிம் பாடசாலை விடுதி அமைப்புக்கு ரூபா 2 லட்சம்.

**மின்சாரம்:**

கோணாவிலுக்கு மின்சாரம் வழங்க ரூபா 1 லட்சம், கண்டாவளைக்கு ரூபா 1 லட்சம், திருவையாறு 2ம் பகுதிக்கு ரூபா 1 லட்சத்து 14 ஆயிரம், பரந்தன் ஓவசியர் சந்திக்கு ரூபா 1 லட்சத்து 83 ஆயிரம், இரத்தினபுரத்துக்கு ரூபா 1 லட்சத்து 5 ஆயிரம், சிங்கள மகா வித்தியாலய கட்டடத்துக்கு மின்சார வேலைகளுக்கு ரூபா 20 ஆயிரம், அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு மின்சாரம் பொருத்த ரூபா 1 லட்சத்து 40 ஆயிரம், கனகாம்பிகைக்குளம் பகுதிக்கு மின்சாரம் வழங்க ரூபா 1 லட்சம்.

**பொதுசனத் தொடர்பு:**

சிரமதானங்கள் மூலம் மேற்கொள்ளும் பணிகளுக்கு ரூபா 1 லட்சம், புதுமுறிப்பு கிராம முன்னேற்றச் சங்க கட்டடம், ஜெயந்திநகர் கிராமமுன்னேற்றச் சங்க கட்டடம், கோணாவில் புதுமுறிப்பு வீதி, இரத்தினபுரம் என்பன அமைக்க ரூபா 2 லட்சம்.

**விவசாயம்:**

கனகாம்பிகை மகளிர் திட்டத்திற்கு ஆஸ்திரேலியா தூதரகத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட குழாய்க் கிணறுக்கு பொருத்தும் நீர் இறைக்கும் இயந்திரம் பொருத்த ரூபா 30 ஆயிரம்.

**இளைஞர் சேவை:**

இளைஞர் சேவை மன்ற வேலைப்பாடுகளுக்கு ரூபா 25 ஆயிரம். 155 ஆம் கட்டையில் உயிரியல் வாயு நிலையம் அமைக்க ரூபா 35 ஆயிரம்,

**விளையாட்டு:**

விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் பெற்றுக் கொடுக்க ரூபா 25 ஆயிரம்.

**சுகாதாரம்:**

சுகாதார விழாக்கள், கருத்தரங்குகள் நடத்த ரூபா 25 ஆயிரம், கல்மடு நகரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ரூபா 50 ஆயிரம், கிளிநொச்சி மாவட்ட கதிர் இயக்க மண்டப மிகுதிக் கட்டட வேலைகளுக்கு ரூபா 1 லட்சத்து 25 ஆயிரம், இதே வைத்தியசாலையில் குழி மல கூடத்தை நீரடைப்பு மலகூடமாக மாற்ற ரூபா 50 ஆயிரம், பூநகரி வைத்தியசாலை நீர் வழங்கல் வேலைக்கு ரூபா 25 ஆயிரம்.

**மீன்பிடி:**

இரணைதீவு மீனவர்களுக்கு குழாய்க்கிணறு அமைக்கவும், கடற்கரையில் மீனவர்கள் தங்க மடம் அமைக்கவும் ரூபா 70 ஆயிரம்.

**கால் நடை வளர்ப்பு:**

கிளிநொசசி பால் சேகரிப்பு நிலைய உபகரணங்கள் கொள்முதலுக்கு ரூபா 1 லட்சம்.

மாவட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் உள்ள உப அலுவலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் வேலைகள்:

கிளிநொச்சி உப அலுவலகத்தினால் புதிய சந்தை திருத்த வேலைகளுக்கும், புதிய வீதி மின்சார அமைபபு வேலைகளுக்கும் 4 லட்சம் ரூபா, மர அரிவு ஆலைக்கட்டடத்தை திருத்தி அமைக்க ரூபா 2 லட்சம். கரைச்சி உபஅலுவலகத்தால் முரசுமோட்டையில் பொதுமக்கள் நூல் நிலையம், கனகபுரம் வீதி திருத்தல், வட்டக்கச்சியில் மீன்சந்தை அமைக்க உருத்திரபுரத்தில் சுடலை மடம் கிணறு அமைக்க ரூபா 2 லட்சத்து 60 ஆயிரம்.

புலோப்பளை மாசார்க் கிராமத்தில் ஐந்து பொதுக் கிணறுகள் அமைக்கவும், பொதுக் கட்டடம் அமைக்கவும், கடைகள் கட்டவும், ஊறணிப்பற்று தச்சுத்திக்கு வீதி திருத்தவும் ரூபா 2 லட்சத்து 25 ஆயிரம்.

முகமாலை சுடலை, கிளாலி வீதி, பொன்னையா காடு வீதி, முருகமூர்த்தி கோயில் வீதி, திருத்த ரூபா 1 லட்சம்.

முள்ளிப்பற்று உப அலுவலக மதில் வேலைகளுக்கும் வாசிகசாலை அமைப்புக்கும் ரூபா 80 ஆயிரம்.

பூநகரிப் பகுதியில் கிணறுகள் திருத்த, அமைக்க, புதுக்கிணறு ஞானி மடத்தில் கிணறு அமைக்க, மார்க்கட் திருத்த, இராமலிங்கம் வீதி திருத்த ரூபா 78 ஆயிரம்.

பல்லவராயன் கட்டு வலைப்பாடு கிராஞ்சி வீதி திருத்த ரூபா 40ஆயிரம்.

இரணைதீவு அந்தோனியார் வீதி, சேச் வீதி திருத்த ரூபா 80 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**கட்டட வேலை:**

கிளிநொச்சிக் கச்சேரி பதிவாளர் அலுவலகம், திட்டமிடல் பணிப்பாளர் அலுவலகம் அமைக்க ரூபா மூன்றரை லட்சம்.

**தொழிற்சாலை:**

கிளிநொச்சி தும்புத் தொழிற்சாலைக் கட்டடத்திற்கு ரூபா ஒன்றரை லட்சம்.



### பொய்யாமொழி

குறள்:
தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

பொருள்:
கற்பு நெறியில் தன்னையும் காத்துக் கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றித் தகுதியமைந்த புகழையும் காத்து, உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண்.

# தோட்டப் பகுதிகளில் மலையக தமிழ் இளைஞர் துணைப்படை

## அரசிடம் இ. தொ. கா கோரிக்கை

கொழும்பு ,ஜன 22

தோட்டப் பகுதிகளில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட மலையகத் தமிழ் இளைஞர்களைக் கொண்ட துணைப்படை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்த உள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி நேற்று கண்ட தகவலைத் தெரிவித்தார்.

மலையகத் தமிழருக்குக் குடியுரிமை கிடைத்தாகி விட்டது. மலையகத் தமிழர் குடியுரிமை பெறுவதற்குத் தேவையான சகல உதவிகளையும் தோட்டப் பகுதிகளில் உள்ள இ.தொ.கா. கிளைகள் தோட்ட நிருவாகங்களுக்கு வழங்கும்.

இ. தொ. கா. வேறு இரண்டு கோரிக்கைகளை அரசின் முன் வைத்துள்ளது.

இக்கோரிக்கைகள் குறித்து அரசாங்கத்துடன் இ. தொ.கா. பேச்சுக்களை நடத்த உள்ளது.

அக்கோரிக்கைகள் வருமாறு;

1. தோட்டங்களில் தொழிலாளர் வாழும் குடியிருப்புக்கள் தொழிலாளருக்கே உரிமையாக்கப்பட வேண்டும்.

2. தோட்டங்களில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட மலையகத் தமிழ் இளைஞரைக் கொண்ட துணைப்பாதுகாப்புப்படை ஒன்று அமைக்கப்பட வேணடும்.

இப்படி திரு. செல்லச்சாமி சொன்னார்.

### சமய சந்நிதிகளில்

#### மகாயாகம்

யாழ்ப்பாணம், ஜன 22

நாட்டு மக்களின் நலன் கருதி நல்லூர் சிவன் கோயிலில் மகாயாகம் ஜனவரி 23, 24, 25 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

பேராசிரியர் கலாநிதி சிவஸ்ரீகா. கைலாசநாதக் குருக்கள் மகாயாகத்துக்குத் தலைமை வகிப்பார்.

நல்லூர் பகவான் ஸ்ரீ சத்திய சாயி இல்லத்தின் ஆதரவில் பொதுமக்களின் உதவியுடன் இம் மகாயாகம் நடைபெற இருக்கின்றது.

25 ஆம் திகதி நண்பகல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் யாழ் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தியினர் அன்னதானம் வழங்குவர்.

#### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 22

கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வர ஆலய மகா கும்பாபிஷேகம் 26-1-86 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் நடைபெறும்.

சர்வ போதகர்களாக பேராசிரியர் கலாநிதி சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ கா. இரத்தினகைலாசநாதக் குருக்கள் ஆகியோரும் பிரதம பிரதிஷ்டாபதியாக சிவாசாரியார் சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்களும் இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பர்.

# படகில் வந்த தமிழ் போராளிகளிடம் சிக்கிய சிங்கள மீனவர்களின் அனுபவம்

திருகோணமலை, ஜன. 22

திருமலைக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மூன்று சிங்களவர்கள், இன்னொரு படகில் ஆயுதங்களுடன் வந்த போராளிகளினால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

மூன்று நாள் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட 3 மீனவரும் கடந்த திங்கட்கிழமை திருகோணமலை வந்து சேர்ந்தனர்.

திருகோணமலை பொலிஸ்நிலையம் சென்று தங்களுக்கு நேர்ந்த அனுபவங்கள் பற்றி மூன்று மீனவரும் முறையிட்டனர்.

வில்பர்ட் (வயது 30) வீரசிங்க, (வயது 35) குணதாஸ, (வயது 25) ஆகிய மூன்று மீனவர்களும் பொலீஸுக்கு அளித்த வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

15-1-1986 நாம் இயந்திரப் படகில் மீன் பிடிக்கப் படகு ஒன்றில் புறப்பட்டோம். நடுக்கடலில் காற்று பலமாக வீசவே, மீண்டும் திருமலைக்குத் திரும்பவில்லை.

பலத்த காற்றுக் காரணமாகப் படகு, முல்லைத்தீவுப் பக்கம் இழுத்துச் செல்லப்பட்டது.

முல்லைத்தீவுக் கரையை அடைந்த நாம மறுநாள் திருகோணமலைக்குப் புறப்பட்டோம்.

படகில் நடுக்கடலில் வந்தபொழுது, வேறொரு படகில் வந்தவர்கள் எம்மை மறித்தனர். அவர்கள் இளைஞர்கள். அவர்கள் கைகளில் ஆயுதங்கள் இருந்தன.

படகுடன் எம்மைக் கரைக்குக் கொண்டு சென்றனர்.

மூன்று தினங்களாக முகாமில் வைத்து விசாரித்தனர்.

மூன்று தினங்களும் பாணும் தண்ணீரும் தான தந்தனர்.

தமிழிலும் சிங்களத்திலும் எம்முடன் பேசினார்கள்.

''சிங்களவர்களுக்கு நாம் எதிரானவர்கள் அல்ல. அதனால் உங்களை உயிருடன் விடுகிறோம்'' என்று அவர்கள் கூறினார்கள்.

''நாங்கள் உமாமகேஸ்வரன் தலைமையிலான 'புளொட்' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்'' என்றும் அவர்கள் சொன்னார்கள்.

'' தமிழர் தம் உரிமைகளுக்காக போராடுகின்றார்கள் என்பதைச் சிங்களவர்களுக்குப் போய்க் கூறுங்கள்'' என்றும் அவர்கள் எம்மிடம் சொன்னார்கள்.

17-1-1986 இல் பின்னர் வவுனியாவுக்கு எம்மைக் கொண்டு வந்து விட்டனர். 50 ரூபா பணம் தந்தார்கள். அப்பணத்துடன் நாம் பஸ்ஸில் திருமலை வந்து சேர்ந்தோம்.

இப்படி அந்த மூன்று சிங்களவர்களும் திருமலைப் பொலீஸுக்கு முறையிட்டனர்.

## அச்சுவேலியில் கறுப்புக் கொடி

அச்சுவேலி, ஜன. 22

நேற்றுமுன்தினம் அச்சுவேலி பகுதியில் கறுப்புக் கொடிகளுடன் தோரணங்கள், வாழைகள் கட்டப்பட்டிருந்தன.

கடந்த மாதம் சுதுமலைப் பகுதியில் இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையில் நடைபெற்ற கடும் சமரின் போது ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்கு இலக்காகி உயிர் நீத்த அச்சுவேலியைச் சேர்ந்த ரூபன் (அல்பேட்) என்பவரை நினைவுகூருமுகமாகவே துக்க தினம் அனுட்டிக்கப்பட்டது.

அச்சுவேலி பஸ் நிலையத்தில் 20 அடி உயரமான பெரிய அளவான படம் ஒன்றும் — அச்சுவேலி உயாவிளான் சந்தியில் அலங்கார வளைவு ஒன்றுடன் அவரது படமும் வைக்கப்பட்டிருந்தன.

## 6 இலங்கையர் காப்பாற்றப்பட்டனர்

கொழும்பு, ஜன. 22

இப்பொழுது சண்டை நடந்துகொண்டு இருக்கும் தென்யேமனில் தொழில் பார்க்கும் ஆறு இலங்கையர்கள் காப்பாற்றப்பட்டு விட்டனர்.

இவர்களை ஏற்றிக் கொண்டு பிரிட்டிஷ் கப்பல் ஒன்று லண்டன் சென்றது.

இச்சண்டையில் இது வரையில் 9,000 பேர் கொல்லப்பட்டனர் என்று ஊர்ஜிதமற்ற தகவல்கள்தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NIRU Tution Centre**

O/L, 9ஆம் வகுப்புக்கான
பிரிவு - 1!!
ஆரம்பம்- 23 - 1 - 86

விஞ்ஞானம் - செல்வவடிவேல்
கணிதம் : இந்திரன்
வர்த்தகம் - நவம்
சமூகக்கல்வி - வேலாயுதபிள்ளை
தமிழ் - பண்டிதர் இராசையா / ராஜேந்திரா
ஆங்கிலம் - ரவி
சுகாதாரம் - உமாதேவி



# உதயன்

22-01-1986



**NIRU Tution Centre**

புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.
A/L - 88-ம் ஆண்டிற்கு
APPLIED & PURE MATHS
A. பத்மநாதன்
* குறிப்பிட்ட மாணவர்களுக்கு மட்டும்.


## வித்தாரம்

என்ன முாளித்தம்பி! முகத்தை ஒரு மாதிரிச் சுளிச்சுக் கொண்டு வாறீர்?

ஓகோ என்னேடை கோபமோ? போன சனிக் கிழமைக்குப் பிறகு இண்டைக்குத்தான் உம்மைச் சந்திக்க முடிந்தது.

நான் பல சோலிக்காரன். பல இடத்தை போக வேண்டிய தேவையள். எண்டாலும் ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாளிலை உம்மை எப்பிடியும் சந்திக்க வேண்டும் என்பதுதான் எனக்கு ஆசை. அதிலை எனக்குப் பெரிய விருப்பமும் கூட. ஆனல் சந்தர்ப்ப சூழ்நிலை சில வேளையிலை அதைத் தடுத்துப் போடுது, என்ன செய்ய!

என்ன - ஊர், உலக சமாச்சாரங்கள் எப்பிடியிருக்கு? ஏதாவது புதிசா நடந்திருக்கோ?

ஓகோ, இந்த ஊர்வலங்களைச் சொல்லுறியாக்கும்.

அது தானே. மக்களுக்கும் போராட்ட உணர்வு வந்திருக்கு. மெத்தச் சந்தோஷமான விஷயம்.

இவ்வளவு நாளாய் எங்கடைபொடியள் மட்டுந்தான் ஏதாவது செய்து எதையாவது பெறட்டும் எண்டு அசட்டையா இருந்தவை; இப்பதான் தாங்களும் ஏதாவது செய்ய வேண்டும் எண்டு வெளிக்கிட்டிருக்கினம்.

எல்லாம் நன்மைக்கே எண்டு நம்புறவைக்கு நான் சொல்லுறது புரியும். பாதுகாப்பு வலயத்தை அரசாங்கம் வளைச்சுப் போட்ட உடனை தான், தங்கடை சமூகத்திலை சுருக்குப் போட்டாச்சு எண்ட உணர்வு எங்கடை சனத்துக்கு வந்திருக்கு.

தண்ணி மூக்குக்கக் கிட்ட ஏறினத்துக்குப் பிறகுதான் மூச்சு விடுகிறது கஷ்டம் எண்டதுங் அவைக்கு இப்ப விளங்கியிருக்கு.

பாதுகாப்பு வலயத்திலையிருந்து பீரங்கி அடிச்சால் குண்டு வந்து விழுந்து சாகிறுர்கள் தானே. அதுக்கு முன்னுக்கு ஒரு இலட்சியத்துக்காகச் செத்தாலும் பரவாயில்லை எண்ட ஓர்மம் வந்திருக்குப் போலை. இவ்வளவு பிந்தியாவது ஞானம் வந்ததைப் பாராட்ட வேண்டும். பாதுகாப்பு வலயம் அந்த வகையிலையாவது நன்மை செய்திருக்கு எண்டு சொல்லுறன், அவ்வளவு தான்.

உனக்கு ஒரு விஷயம் தெரியுமோ? என்னவோ; பாதுகாப்பு வலயம், பீரங்கி முழக்கம்– அது இது எண்டு இவைக்கு "ஐடியா" குடுத்தது இந்த மொசாட்டைத் தவிர வேறு யாராய் இருக்க முடியும்? நேரத்துக்கு நேரம் ஒரு ஐடியா குடுக்கிறதிலை அவை சரியான விண்ணர்! ஆனல் அவை குடுத்த ஐடியாக்கள் இஞ்சை அவ்வளவு வெற்றியளிச்சதாகத் தெரியயில்லை.

கதையிக்கை கதையா ஏழாலை, குரும்பசிட்டி தாக்குதலிலை ஒரு குழுவுக்கு வெள்ளையன் ஒருவன் தலைமை வகிச்சு வந்தான் எண்டும் ஆனா அந்தக் குழுவாலை முன்னேறிச் செல்ல முடியாமற் போனதாகவும் சனம் கதைக்குது. உண்மை பொய் தெரியாதப்பா. அது உண்மை எண்டா வந்தவன் மொசாட்காரனாகத் தான் இருப்பான்.

உனக்குத் தெரியுமே வடக்குக், கிழக்கிலை முகாம்கள் சுமார் அறுபது இருக்குது. அதுகளைச் சுற்றி ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயம் போட்டால் எங்கடைத் தமிழ்ப் பகுதியிலை 15 வீதத்தை விழுங்கினலும் விழுங்கிவிடும்.

**கொண்டோடி**

# பாதுகாப்பு வலயம்:
# வாபஸ் பெற்று கோட்டை
# ராணுவ முகாமை அகற்றுங்கள்

## யாழ். முஸ்லிம்கள் ஜனுதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜன. 22

அரசாங்கத்தினுல் பிரகடனம்செய்யப்பட்டுள்ள பாதுகாப்புவலயம் வாபஸ் பெறப்பட வேண்டும். கோட்டை இராணுவ முகாம் அகற்றப்படவேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று யாழ் முஸ்லிம் பொதுமக்கள் குழுவினுல் ஜனுதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுவதற்காக யாழ் அரசாங்க அதிபரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

ஊர்வல முடிவில் யாழ் செயலக வாசலில் வைத்து மகஜரை அரசாங்க அதிபர் திரு பஞ்சலிங்கம் ஏற்றுக் கொண்டார்.

மகஜரில் உள்ள விவரம் வருமாறு:-

கோட்டையைச் சுற்றியுள்ள பாதுகாப்புவலயம் யாழ்ப்பாணத்தில் 10,000 முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக வாழும் 1000 மீட்டர் வலயத்துள்ளேயே அமைந்துள்ளது.

நாங்கள் கீழே தெரிவித்துள்ள காரணங்களினுல் மேற்படி வலயத்தை ரத்துச் செய்யுமாறு தங்களை வேண்டுகிறேம். கோட்டையில்இராணுவமுகாம் அமைந்திருப்பதாலேயே இவ்வலயப் பாதிப்பு ஏற்படுவதாலும் கோட்டையிலிருந்து இராணுவ முகாமை அகற்றுமாறும் வேண்டுகிறேம்.

அக்காரணங்கள் வருமாறு:-

1. ஆயிரம் மீட்டர் வலயத்துள் எமது வர்த்தகநிலையங்கள்அனைத்தும் உள்ளன. அவ்வியாபார நிலையக் கட்டங்களுக்கும் வியாபாரச் சொத்துக்களுக்கும் அழிவுஏற்படும். வர்த்தக நிலையங்களுக்கு பொதுமக்கள் வர அஞ்சுவதால் எமது வருவாயும் பாதிக்கப்படும்.

2. ஏற்கனவே கோட்டையின் முன்பாகஇருந்த கடைகளை அகற்ற நேரிட்டது முஸ்லிம்களே இதனுல் பாதிப்புக்கு உட்பட்டனர். தற்போது இவ்வலயத்தால் முஸ்லிம்களது சகல பொருளாதார நடவடிக்கைகளும் பாதிப்படையவுள்ளன.

3 வலயம் பிரகடனப்படுத்தப்பட்ட அன்றே 3 முஸ்லிம்கள் பஸ் நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மோட்டோர் ஷெல் தாக்குதலால் மரணம் அடைந்து விட்டனர் எதிர்காலம் பாரிய உயிரிழப்புகளை முஸ்லிம்கள் எதிர் நோக்குவர்.

4. எமது ஒன்பது பள்ளிவாசல்கள், நான்கு முஸ்லிம் பாடசாலைகள், முஸ்லிம் பிரசவ விடுதி, முஸ்லிம் உப தபால் கந்தோர், முஸ்லிம் நூல் நிலையம், முஸ்லிம் மக்களது பொதுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆஸ்பத்திரி, பஸ்நிலையம், வங்கிகள், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், நீதிமன்றம், மீன் சந்தை, காய்கறிச் சந்தை என்பன அமைந்துள்ளதால் எமது கடமைகளைச் செய்ய இவ்விடங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படும்

முஸ்லிம்கள் மட்டுமல்ல இவ்வலயத்துள் வாழும் சகல அப்பாவி மக்களும் பாதிக்கப்படுவதால் இவ்வலயத்தை இரத்துச் செய்வதுடன் கோட்டையிலிருந்து இராணுவ முகாமை அகற்றுமாறும் தங்களை வேண்டுகிறேம்.

மேற்கண்டவாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டம் ஒழுங்கு . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர் மத்தியில் பேசுகையில் சொன்னர்.

பிரிகேடியர் ரூபசிங்கா, வட பகுதி இணைப்பு அதிகாரியாகப் பதவி ஏற்ற பின்னர் நடத்திய முதலாவது செய்தியாளர் மாநாடு இதுவாகும்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில இம்மாநாடு கோட்டை இராணுவ முகாமில் நடந்தது.

மாநாட்டில் அரசரங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பி. பாலசிங்கம, பேராசிரியர் கா. சிவத்தம்பி, கர்னல் ஜி. ஏ குலதுங்க உதவிப் பொலீஸ் அதிபர் கிறிஸ்டி சில்வா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பிரிகேடியர் எச் எஸ். ரூபசிங்கா சொன்னதாவது:

பாதுகாப்பு வலயம் பற்றி பொது மக்கள் உண்மையில் கவலை அடையவேண்டியது இல்லை.

பாதுகாப்புப் படையினரின பாதுகாப்புக் கருதித்தான் பாதுகாபபு வலயம் கொண்டு வரப்பட்டுள்ளது.

நாம் தாக்கப்பட்டால் தான் பதில் தாக்குதலை நடத்த நிர்ப்பந்திக்கப்படுகின்றேம்.

பதில் தாக்குதல் நடத்த வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டவுடன் தான் பதில் தாக்குதலை நடத்துகின்றேம். அதுவும் குறைந்த அளவு சக்தியைத்தான் உபயோகிக்கின்றேம்.

பொதுமக்களும் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும். அப்படி ஒத்துழைத்தால் பாதுகாப்பு வலயம் குறித்து பயப்படுவதற்கு ஒன்றுமே இல்லை.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி ஆயுதப் படையினர் முகாம்களை விட்டு வெளியேறக் கூடாதுஎன்று தீவிரவாதிகள் தெரிவிக்கிறுர்களே என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு பிரிகேடியர் பதிலளிக்கையில் "சட்டம், ஒழுங்கு பராமரிப்பை நிலைநாட்டுவது எங்கள் கடமை" என்றுர்.

1,000 மீட்டர்கள் பிரதேச எலைகளில் கண்காணிப்பு நிலையங்கள் (Check-Post) அமைக்கும் எண்ணம் உண்டா? என்று கேட்டதற்கு,

"அப்படியான யோசனை கிடையாது" – என்று இணைப்பதிகாரி சொன்னர்.

மேலும் முகாம்கள் அமைக்கப்பட இருப்பதாக வதந்தி அடிபடுகிறதே என்று கேட்டதற்கு,

"அப்படியான தேவை ஏற்படலாம். அது நிலைமையைப் பொறுத்துத் தான் தீர்மானிக்கப்படும்"– இவ்வாறு பிரிகேடியர் சொன்னர்.

## மக்களை பாதிக்கா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யத் தேவை இல்லை. என்று நான் மீண்டும் உறுதி அளிக்கின்றேன்.

இது சம்பந்தமாக பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அனுதாபத்துடனும் சரியான முறையிலும கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

யாழ் கோட்டை மீது தீவிரவாதிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் ஒரு படைவீரர் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து தான் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பாதுகாப்பின் பொது நலன் கருதித் தான் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. ஆனல் இது குறித்துக் கவலைவெளியிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பொது மக்களின் பாதுகாப்புக்கும் இது சரியான தருணத்தில் வந்துள்ள நினைவூட்டலாகும்.

பாதுகாப்புபடையினர் சம்பந்தப்பட்ட மட்டில் எமது நடவடிக்கைகளினுல்பொதுமக்கள் பாதிப்படையாமல் இருப்பதற்கு சக்திக்கு உட்பட்ட சகல முயற்சிகளையும் எடுப்பேன் என்று நான் திட்டவட்டமாக உறுதியளிக்கின்றேன்.

இப்படியான தக்கரமான சம்பவங்கள் இடம்பெறுமல் தவிர்த்துக் கொள்ள சம்பந்தப்பட்ட எல்லோரிடமிருந்தும் ஒத்துழைப்பு ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படுகின்றது

தேவை முடிந்தவுடன் பாதுகாப்பு வலயங்கள் இருக்கமாட்டா" —

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளதுது.

## யாழ் முஸ்லிம்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

வீதி வழியாக யாழ் செயலகத்தைச் சென்றடைந்தது.

'அன்று புத்தளம் இன்று யாழ்ப்பாணம்',

'அன்று ஹிட்லர் இன்று ஜே ஆர்.'

இப்படி எழுதப்பட்ட பல சுலோக அட்டைகளைப் பேரணியில் கலந்து கொண்டோர் தாங்கிச் சென்றனர்.

பேரணி யாழ் செயலகத்தை அடைந்தபோது பேரணியில் சென்ற மக்கள் செயலகம் முன்பாக அமர்ந்து கோஷமிட்டனர்.

செயலக உள்வாசலில் வைத்து யாழ். அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

மகஜருக்குப் பதிலளித்துக் கருத்துத் தெரிவித்த அரசாங்கஅதிபர் திரு எம் பஞ்சலிங்கம் பேரணியின் கோரிக்கை தொடர்பாக தாம் விரிவாக அரசுக்கு எடுத்துச் சொல்ல இருப்பதாக உறுதியளித்தார்,

## தமிழ் இளைஞருடன் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சினைக்குத் தீர்வும் கண்டேன் தொண்டமான் துவக்குத் தூக்கியது கிடையாது. அதேபோல் தமிழ் இளைஞர்களும் தமது பிரச்சினைகளை ஜனநாயக அடிப்படையில் தீர்க்க விருப்பம்கொண்டு அதற்கான சூழ்நிலையைத் தோற்றுவித்தால் இனப் பிரச்சினைக்கு நான் விரைவான தீர்வு காண்பேன்" என்று ஜனுதிபதி சொன்னர்

திரு. ராமுக்கு அளித்த சிறப்புப்பேட்டியில் அவர் தெரிவித்த மற்றும் சில முக்கிய பகுதிகள் வருமாறு:–

கூட்டணியின் மாற்று யோசனையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைக்குமாறு கோரப்பட்டுள்ளது. ஆனல் அதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது

இஸ்ரவேலின் மொஸாட் படைகளை எமது இராணுவத்துடன் சேர்ந்து கடமை புரிவதாககூறப்படுவதை நான் மறுக்கின்றேன். ஆனல் பிரிட்டிஷ் விமான ஓட்டிகள் எங்கள் நாட்டவர்களுக்குப் பயிற்சி அளித்தார்கள் எஸ். ஏ. எஸ். நிறுவனமும் எங்கள் அதிரடிப்படைக்குப் பயிற்சி அளித்தது.

பாகிஸ்தானிடமிருந்து நாங்கள் உதவி பெறுகிறேம் என்பதுஉண்மை. அங்கிருந்து நாங்கள் றைபிள்களை வாங்குகிறேம். இதனை உங்கள் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றேன். இந்தியாவும் இதே போல எங்களுக்கு உதவினல் தீவிரவாதத்தை 3 மாதங்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவந்து விடலாம் —

இவ்வாறு திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

## ஸ்ரார்ட் பண்ணுத...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தும் இடத்துக்கு வந்தனர். அங்கு நின்ற மினி பஸ்களில் ஒன்றுக்கு அருகில் வந்து தமது தேவைக்கு அதனைத் தரும் படியும் சொற்ப நேரத்தில் திருப்பித் தருவதாகவும் கூறினர்

தனது மினி பஸ் ஸ்ரார்ட் பண்ணுது என்று அதன் சாரதி கூறினர். முடியுமானல் ஸ்ரார்ட் பண்ணிக் கொண்டு போகும்படி மினி பஸ் சாரதி சாவியை நீட்டினர்.

ஆயுதப் படையினர் அந்த பஸ்ஸை விட்டு அருகில் நின்ற மற்ருெரு மினி பஸ்ஸை வாங்கிக் கொண்டு சென்று விட்டனர்.

அதில் டயர்கள் ஏற்றிச் செல்லப்பட்டதாகப் பின்னர் தெரிய வந்தது.

ஆயுதப் படையினர் சிறிது நேரத்தில் மினி பஸ்ஸைக் கொண்டு வந்து அதன் சாரதியிடம் ஒப்படைத்தனர்.

அதே கையோடு, முதலில் கேட்டு ஸ்ரார்ட் பண்ணுது. என்று சொல்லப்பட்ட மினி பஸ்ஸை அருகில் இருந்த வாவிக்குள் தள்ளி விட்டனர். அந்த மினி பஸ் சாரதி மட்டும் அல்ல அங்கு நின்ற ஏனைய மினி பஸ்களின் சாரதிகளும் ஆயுதப் படையினரால் [illegible]

இந்தச் சம்பவத்தால் நேற்று மாலை அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

## அந்தச் சடலம்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காயங்கள் காணப்பட்ட இந்த நபரை ஆயுதப் படையினர் நடத்திய இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

இப்படி அழைத்துச் செல்லப்பட்ட நபர் இறந்துவிட்டார் என்று பின்னர் அறிவிக்கப்பட்டது.

## தவறிவிட்டது

எனது பாஸ்போர்ட் இல 107591 விமான பயணச்சீட்டு U.T.A கொழும்பு - மஸ்கட் T.V அனுமதிப்பத்திரம் ஐயம்பிள்ளை கமலாதேவியின் அடையாள அட்டையும் 18ம் திகதி கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த யாழ்தேவி ரெயினில் பிரயாணம் செய்யும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எனக்கு அறியத்தரவும் தகுந்த சன்மானம் கொடுத்து பெற்றுக் கொள்கின்றேன்.

கோபாலாச்சாரி
செல்லையா
மடத்தடி மாவிட்டபுரம்
தெல்லிப்பளை.

## விளையாட்டரங்கு

நாவாந்துறை

# சென். மேரிஸ் இறுதி போட்டிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன. 22

கோண்டாவில் வோக்கேஸ் மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரை இறுதி உதைபந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி வாகை சூடியது.

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை 2க்கு 1 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்த சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

திருநெல்வேலி பாரதி சனசமூக நிலைய ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட 'நொக்கவுட்' முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் ஓர் அங்கமாகவே இது நடைபெற்றது.

சென் மேரிஸ் விளையாட்டுக்கழக பின்னணி வீரர் ரி. மரியதாஸ் (பணி) திறமையாக ஆடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றுர்.

இப்போட்டிக்குதிரு ஏ. எஸ். குணரத்தினம் மத்தியஸ்தராக கடமையாற்றினுர்.

இந்த 'நொக்கவுட்' போட்டியின் மற்றைய அரை இறுதி ஆட்டம் நாளை நடைபெறும் என ஒலிம்பிக் விளையாட்டுக் கழக விளையாட்டுத் தலைவர் எஸ். வி. பரமராஜா தெரிவித்தார்

## சித்தன்கேணியில் அடிக்கல் நடும் விழா

வட்டுக்கோட்டை ஜன,22

சித்தன்கேணி கலைநகர் கம்பம்புலோ ஆதிவைரவ பெருமான் கோவில் அடிக்கல் நடும் விழா இன்று புதன் காலை சிவநெறிக் காவலர் திரு.வீர சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

ஓய்வு பெற்ற வைத்திய கலாநிதி திரு. சின்னத்தம்பி செல்வராசா அடிக்கல்லை நடுவார்.

## யாழ்ப்பாணத்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மகஜர் கையளிக்கப்படும்.

பின்னர் அன்னையர் முன்னணியின் மறியல் போராட்டம் யாழ் செயலகத்தின் முன்பாக ஆரம்பமாகும்.

இன்று கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருக்கும். அரசாங்க ஊழியர்களும் அலுவலகங்களுக்குப் போகக்கூடாது எனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

## சுதந்திரக்கட்சி நேற்று ஆலோசனை

கொழும்பு, ஜன. 22

நாடற்றவர், இனப் பிரச்சினைகள் சம்பந்தமாக சுதந்திரக்கட்சியின் வாலிபர் முன்னணி, மகளிர் முன்னணி, உறுப்பினர்கள் நேற்று ஆலோசனை நடத்தினர்.

## நீத்தார் பட்டியல்

### பிலிப்பு முதலியார் கிறகோரி

செட்டி குளத்தினைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 65, மருதடி வீதி, நல்லூரில் வசித்தவருமாகிய பிலிப்பு முதலியார் கிறகோரி செவ்வாய் (21-01-1986) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னுர் திருமதி அந்தோனியாப்பிள்ளையின் அன்புக் கணவர்.

திருமதி அழகம்மா வன்னியசிங்கம், அந்தோனிப்பிள்ளை (கனடா), அலெக்ஸாந்தர் (அதிபர்-செட்டிகுளம் மகாவித்தியாலயம்), திருமதி செல்வராணி தேவசகாயம், பீற்றர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தை.

திரு வன்னியசிங்கம், திருமதி யோகவதி அந்தோனிப்பிள்ளை (கனடா), திருமதி தர்மாவதி அலெக்ஸாந்தர், தேவசகாயம் (கனடா) திருமதி மனேராணி பீற்றர் (வெளிக்குள போதனுசிரியை–காணி ஆணையாளர் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமனுர்.

அன்னுரின் பூதவுடல் இன்று புதன் கிழமை (22-01-1986) பிற்பகல் 3-30 மணிக்கு யாழ் புனித மரியாள் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:– ஞேகேசன்பிரான்சிஸ்


## திறப்பு விழா

## சமுத்திரா மல்ரி சேவிசஸ்

தெல்லிப்பழை வாழ் மக்களுக்கு
ஓர் மகிழ்ச்சிகரமான நற்செய்தி

யாழ். குடாநாட்டின் மூலைமுடுக்கெங்கும் பல திருமணங்களைச் செய்துவைத்து தமக்கென்று ஓர் தனியிடத்தைப் பெற்றுவிட்ட சமுத்திரா மல்ரி சேவிசஸ் நிறுவனத்தினர், தெல்லிப்பழை வாழ் பெருங்குடி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க தமது கிளை நிறுவனத்தை

தெல்லிப்பழை
ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு
சமீபமாக

**இன்று**

ஆரம்பிக்கவுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றுர்கள்.

திருமண சேவையா? காணி, வீடு வாங்கும்-விற்கும் சேவையா? கட்டட ஒப்பந்தச் சேவையா? உங்கள் தேவை எதுவாக இருந்தாலும் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்
உங்கள் தேவை! எங்கள் சேவை!!

தொடர்பு முகவரி:

**சமுத்திரா மல்ரி சேவிசஸ்**

தலைமை அலுவலகம்: 303, பலாலி ரோட், கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.

எமது கிளை நிறுவனங்கள்:

முருகமூர்த்தி லேன், நெல்லியடி, கரவெட்டி.

கே. கே. எஸ். ரோட், தெல்லிப்பழை. (ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு சமீபமாக)



அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன் (தஷ்ரூ உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியீட்ட திகதி 22-01-1986


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org